## THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## MCOP.70/2019

Deposition of RW1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 18.08.2023.

Evidence Recorded Time: 11.41 A.M to 11.55 A.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | கோபிநாத் | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | மாதராஜ் | **Calling** | : | இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், தர்மபுரி |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை:-**

நான் தர்மபுரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அழைப்பாணை வந்ததன் பேரில் வட்டார போக்குவரத்து அலுவலரின் அனுமதிக் கடிதத்துடன் சாட்சியம் அளிக்க அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களுடன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். <u>எனக்கு வழங்கப்பட்ட அனுமதிக் கடிதம் சா.சா.ஆ.1 ஆகும்.</u> பென்னாகரம் வட்டம், பத்தரஹள்ளி என்ற பகுதி எங்கள் அலுவலகத்திற்கு உட்ப்பட்ட பகுதி என்றால் சரிதான். பத்தரஹள்ளி, புளியமரத்தானூர் பகுதியை சேர்ந்தி சிவலிங்கம் மகன் தங்கராஜ் என்பவர் எங்கள் அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளாரா என்றால் இல்லை. வாகன் என்ற செயலி மூலமாக இந்தியாவில் எங்கு ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தாலும் அதனை தெரிந்து கொள்ளலாம் என்றால் சரிதான். தங்கராஜ் எந்த பகுதியிலும் ஓட்டுநர் உரிமம் எடுத்ததாக தகவல் இல்லை என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் எடுக்கும் போது ஆதார் அட்டை உடன் இணைப்பதால் ஓட்டுநர் உரிமம் எங்கு எடுத்திருந்தாலும் அதனை பார்த்து தெரிந்து கொள்ளலாம் என்றால முகவரி வரை சரிபார்த்து கொள்ளலாம்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்த பிறகு தங்கராஜ் என்பவரை நாங்கள் அழைத்து விசாரித்தோமா என்றால் இல்லை. அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள முகவரியில்

தங்கராஜ் குடியிருக்கிறாரா என்று தெரியுமா என்றால் தெரியாது. தங்கராஜ் வேறு மாவட்டங்களுக்கு குடிபெயர்ந்து இருந்தார் வாகன் செயலி மூலம் தெரியவரும் என்று நான் சொல்வது சம்மந்தமாக ஆவணம் கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை, எங்கள் அலுவலகத்தில் எடுத்திருந்தால் மட்டும் தான் தெரியும். சம்மனில் குறிப்பிட்ட முகவரி தவிர்த்து வேறு மாவட்டத்திலோ, வட்டத்திலோ ஓட்டுநர் உரிமம் எடுத்திருந்தால் எங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். ஓட்டுநர் தங்கராஜிற்கு கடிதம் அனுப்பி அவரை விசாரிக்கவில்லை என்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

ஒம்/–RW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.